# Sri Lanka's Foreign Relations with United States of America and European Countries: Study Based on 2009-2015

**Safna Sakki M.B.[60] & Aliff S.M.[61]**

**Abstract**

The foreign policy of Sri Lanka denotes the diplomatic relationships between Sri Lanka and other nations. The foreign relationship of Sri Lanka has been changed depending on the policies of governors and political parties and international, regional and local political dimension have also affected this foreign relations of Sri Lanka. Due to the ethnic conflict that lasted for three decades, Sri Lanka faced so many challenges in national and international level. In 2009 after the civil war was came to an end there had been some challenges in the foreign relations of Sri Lanka too. Sri Lanka's much attention on developing the war time economy and sovereign political decision making power in local context were the main reasons for these changes. In this case during post war period (2009-2015) the government of Mahinda Rajapakshe has loosened the foreign relations with United States of America and European countries and it has maintained the relationship with non-western countries like China, Russia…Etc. This nature has paved way to earn hatred of United States of America and European countries and to face many challenges in national and international level. The research problem of this study is to see the challenges faced by Sri Lanka in maintaining the foreign relations with America and European countries. The objective of this study is to find out what are the factors that affected foreign relations of Sri Lanka with United States of America and European countries during 2009 to 2015 and also to identify the challenges faced by Sri Lanka for following the foreign relations with America and European countries. Further this study takes the form of qualitative analysis and the data was collected from both primary and secondary sources. Hence the primary data was collected through interview and discussion where previous researches, newspapers, books and statistics were used as secondary data collection methods.

**Keywords**: Diplomacy, Foreign Policy, Post-war, Sri Lanka, United States of America, European Countries

To whom correspondence should be addressed: safna.sakee@gmail.com

[60] Assistant Lecturer, Department of Political Science, South Eastern University of Sri Lanka.

[61] Senior Lecturer, Department of Political Science, South Eastern University of Sri Lanka.

**1.அறிமுகம்**

சர்வதேச சமூகத்தில் எந்தவொரு அரசும் மற்றைய அரசுகளுடனான உறவின்றி தனித்து வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சர்வதேச சமூகத்தின் அரசுகளானது இதர அரசுகளுடன் தொடர்புகளை பேணிக்கொண்டு தமது தேசிய நலன், தேசிய பாதுகாப்பு, தேசிய பொருளாதாரம் என்பவற்றுக்கு வலுச்சேர்க்கும் வகையில் வெளிநாட்டுக் கொள்கையை கையாண்டு வருகின்றன.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை எடுத்து நோக்குகின்ற போது அது ஏனைய நாடுகளுடன் பேணி வரும் இராஜதந்திர மற்றும் வர்த்தக ரீதியான தொடர்புகளை குறித்து நிற்பதோடு அது காலத்துக்கு காலம் மாற்றமடைந்தும் வந்துள்ளது. இம்மாற்றமானது ஆட்சியதிகாரம் பெற்ற இரு பிரதான அரசியல் கட்சிகளின் கொள்கைகளுக்கேற்பவும் பிராந்திய, சர்வதேச சூழலுக்கேற்பவும் இடம்பெற்று வந்துள்ளது. அதன்படி ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வருகின்ற போது இந்தியா, சீனா போன்ற நாடுகளுடனான உறவினை தளர்த்தி மேற்கு நாடுகளுடன் நெருக்கமான உறவினை கடைப்பிடித்து வந்துள்ளமையும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வருகின்ற போது அணிசேராக் கொள்கையை அடிப்படையாகக்கொண்டு கம்யூனிச நாடுகளுடன் சுமுகமான உறவினை பேணி வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறானதொரு பின்னணியின் கீழ் வளர்ச்சியடைந்து வந்த இலங்கையின் வெளியுறவுக் கொள்கையானது யுத்தத்திற்கு பின்னரான 2009-2015 வரையான காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனான வெளியுறவில் எத்தகைய மாற்றங்களை கொண்டுவந்தது என்பதனையும் அதன்மூலம் இலங்கை தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக எவ்வாறான சவால்களை எதிர்நோக்கியது என்பதையும் ஆராய்வதாக இவ்வாய்வானது அமையப்பெற்றுள்ளது. அந்தவகையில் இவ்வாய்வானது ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனான (பிரித்தானியா, பிரான்ஸ், ஐரோப்பிய யூனியன்) உறவுகளை மையப்படுத்தியதாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2. ஆய்வுப் பிரச்சினை**

சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது ஆட்சிக்கு வரும் அரசாங்கங்களின் கொள்கைகளுக்கேற்ப மாற்றமடைந்து வந்துள்ளது. இதன்படி இலங்கையானது மேற்கு சார் நாடுகளுடனும் மேற்கு சாரா நாடுகளுடனும் உறவினை பேணி வந்திருக்கின்றது. இந்நிலையில் யுத்தத்தின் பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது புதிய பாதையில் பயணிப்பதாக அமைந்துள்ளது. அதன்படி இலங்கையின் இறுதிக்கட்ட போர் நடவடிக்கையின் போது யுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வருவதற்காகவும் யுத்த முடிவினை அடுத்து நாட்டை கட்டியெழுப்புவதற்காகவும் பெரும்பாலும் சீனா, ரஷ்யா, இந்தியா உள்ளிட்ட நாடுகளுடன் நெருக்கமான உறவினை பேணி வந்துள்ளதுடன் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் தளர்ச்சியான உறவினையும் கையாண்டு வந்துள்ளது.

அதேவேளை 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதை தொடர்ந்து இலங்கை மீது கொண்டு வரப்பட்ட யுத்தக்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா சார் நாடுகள் செயற்பட்டு வந்தமையும் சீனா, இந்தியா, ரஷ்யா உள்ளிட்ட மேற்கு சாரா நாடுகள் இலங்கைக்கு ஆதரவு தெரிவித்து வந்தமையும் நாம் அறிந்ததே. 2012 ஆம் ஆண்டுக்கு பின்னரான காலப்பகுதியில் இலங்கையானது முற்று முழுதாக அமெரிக்க எதிர்ப்புவாத நாடுகளுடன் தனது வெளிநாட்டுக் கொள்கையினை அமைத்துக்கொள்ள வந்தமையானது இலங்கையில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தது. இதன்படி ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனான வெளியுறவின் போது இலங்கை உள்ளக மற்றும் சர்வதேச ரீதியாக எவ்வாறான சவால்களை எதிர்நோக்கியது என்பதனை ஆய்வுப்பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 3. ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. 2009-2015 வரையான காலப்பகுதியில் இலங்கையின் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனான வெளியுறவினை நிர்ணயித்த காரணிகளை பரிசீலித்தல்.
2. 2009-2015 வரையான காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனான வெளியுறவின் போது இலங்கை எதிர்நோக்கிய சவால்களை கண்டறிதல்.

### 4. ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது ஓர் சமூக விஞ்ஞான ஆய்வாக காணப்படுகின்றமையால் இதில் பண்பு சார் ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்விற்கான தரவுகள் பெரும்பாலும் இரண்டாம் நிலைத்தரவுகளிலிருந்தும் குறைந்தளவு முதலாம் நிலைத்தரவுகளிலிருந்தும் திரட்டப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவு மூலாதாரங்களாக நேர்காணல், கலந்துரையாடல் என்பனவும் இரண்டாம் நிலைத்தரவுகளானது கல்வியியலாளர்களால் வெளியிடப்பட்ட நூல்கள், பத்திரிகைகள் மற்றும் இணையத்தளக்குறிப்புக்கள் என்பவற்றினூடாகவும் சேகரிக்கப்பட்டு விபரணப்பகுப்பாய்வின் மூலமாக பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

நேர்காணல் (12)

- அரசியல் உயர்குழாமினர்-02
- கல்வியியலாளர்கள்-05
- ஆய்வாளர்கள்-03
- பொது மக்கள்-02

### 5. இலக்கிய மீளாய்வு

ஓர் ஆய்வானது சிறப்பானதாகவும் திறமையானதாகவும் அமைய வேண்டுமானால் அவ்வாய்வு தொடர்பாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், நூல்கள், கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகள் பற்றி மீளாய்வு செய்வது அவசியமானதாகும்.

அந்தவகையில் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பாக பலர் பலவிதமான ஆய்வுக்கட்டுரைகளையும் நூல்களையும் அறிக்கைகளையும் கோட்பாட்டு ரீதியாக தொகுத்து வெளியிட்டுள்ள அதேவேளை யுத்தத்திற்கு பின்னராக 2009-2015 வரையான காலப்பகுதிகளில் இலங்கைக்கும் மேற்கு நாடுகளுக்குமிடையிலான வெளியுறவுகள் தொடர்பிலான நடைமுறை ரீதியிலான ஆய்வுக்கட்டுரைகள் பலவும் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் பின்வருவன இவ்வாய்வுக்கான பின்னணியாக கொள்ளப்படுகின்றன.

கணேசலிங்கம், கே.ரீ., (2014). எழுதிய *"இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை 1948-2010"* என்ற நூலில் வெளிநாட்டுக் கொள்கை என்ற தலைப்பின் கீழ் வெளிநாட்டுக் கொள்கை குறித்த வரைவிலக்கணங்கள், வெளிநாட்டுக் கொள்கையின் வகைகள், வெளிநாட்டுக் கொள்கையை நிர்ணயிக்கும் மூலங்கள் தொடர்பாகவும் சுதந்திரத்தின் பின் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை என்ற அத்தியாயத்தின் கீழ் 1948-1977 வரையான காலப்பகுதிகளில் ஆட்சிக்கு வந்த UNP மற்றும் SLFP அரசாங்கங்கள் பின்பற்றிய வெளிநாட்டுக் கொள்கை, திறந்த பொருளாதாரக் கொள்கை பற்றியும் புதிய உலக ஒழுங்கும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையும், சமாதானப் பேச்சுவார்த்தையும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையும் தொடர்பாகவும் விளக்கப்பட்டுள்ளது.

இர்பான், எம்.ஐ.எம்., (2010). என்பவர் கலம் சஞ்சிகையில் *"யுத்தத்திற்கு பின்னரான இலங்கையின் வெளியுறவுக் கொள்கை புதிய பரிணாமமும் அது எதிர்கொள்ளும் சவால்களும்* " என்ற தலைப்பின் கீழ் எழுதிய ஆய்வுக்கட்டுரையில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் தன்மை, அது காலத்துக்கு காலம் மாற்றமடைந்து வந்துள்ள விதம், உள்நாட்டு யுத்தத்தின் விளைவுகள், மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆட்சிக்காலத்தில் யுத்தத்தின் போதும் யுத்த வெற்றிக்கு பின்னரும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த வெளிநாட்டு கொள்கைகள் என்பன பற்றி விளக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் யுத்த காலத்தில் பலஸ்தீன், நேபாளம், அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இலங்கைக்கு வழங்கிய உதவிகள் தொடர்பாகவும் இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான ஆயுத ரீதியிலான உறவுகள் தொடர்பாகவும் சீனாவினால் வழங்கப்பட்ட அரசியல் ரீதியான, இராணுவ ரீதியான உதவிகள் தொடர்பாகவும் லிபியா, ஈரான் போன்ற மத்திய கிழக்கு நாடுகளுடனும் அயல் நாடான இந்தியாவுடனும் பேணப்பட்டு வந்த வெளியுறவுக் கொள்கை தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ள அதேவேளை யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் ஜனாதிபதியின் ஜோர்தான் நாட்டு விஜயம் குறித்தும் இலங்கை மீதான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் மனித உரிமை மீறல் தொடர்பான செயற்பாடுகள் குறித்தும் அச்சந்தர்ப்பத்தில் மேற்கு நாடுகள் விசேடமாக அமெரிக்கா, கனடா, இஸ்ரேல், நெதர்லாந்து போன்றன இலங்கை மீது செலுத்திய அழுத்தங்கள் குறித்தும் அவை நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையில் பாதிப்புச்செலுத்திய விதம் குறித்தும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

Kandaudahewa, H. (2015). என்பவர் எழுதிய "Sri Lanka in Commonwealth: UK-Sri Lanka Political and Economic Relations 2009-2015" என்ற தலைப்பின் கீழ் அமைந்த ஆய்வுக்கட்டுரையில் 2009-2015 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கும் பிரித்தானியாவுக்குமிடையிலான அரசியல், பொருளாதார ரீதியிலான உறவுகளை விளக்குவதுடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட யுத்தக்குற்றங்கள் தொடர்பில் பிரித்தானியாவின் நிலை தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

Iromi Dharmawawardhane. (2016) என்பவர் எழுதிய 'Impact of the change in Government on Sri Lanka's Foreign Policy and Relations with majoe Foreign Powers' என்ற தலைப்பிலமைந்த ஆய்வுக்கட்டுரையில் இலங்கைக்கும் அமெரிக்கா மற்றும் ஜப்பானுக்குமிடையிலான அரசியல், பொருளாதார உறவுகள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ள அதேவேளை இலங்கைக்கு எதிராக மேற்கு நாடுகளினால் கொண்டுவரப்பட்ட யுத்தக்குற்றங்கள் தொடர்பிலான பிரேரணைகள் குறித்தும் அதிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறையாக இலங்கை சீனாவுடன் கடைப்பிடித்து வரும் உறவுகள் குறித்தும் விபரிக்கப்பட்டுள்ளன.

www.srilankamirrorirror.com/news/item/11116-sri-lanka-s-democratic-transition-a-new-era-for-the-u-s-sri-lanka-relationship. என்ற இணையத்தளத்தில் Lisa Curtis என்பவர் எழுதிய *"Sri Lanka's Democratic Transition: A New Era for the US-Sri Lanka Relationship"* என்ற ஆய்வுக்கட்டுரையில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தேசிய அரசாங்கத்தின் அமெரிக்காவுடனான உறவு, இலங்கையின் யுத்தத்தின் போதான மனித உரிமை மீறல், இலங்கை வெளிவிவகார அமைச்சரின் அமெரிக்க விஜயம், மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழான சீன மற்றும் இந்திய உறவு, மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் இந்தியா, சீனா, ஜப்பான், பாகிஸ்தான் ஆகியவற்றுடனான உறவு, சீனாவுடனான 'Chinese Port City Project', சமகால மற்றும் எதிர்காலத்தில் இலங்கை-அமெரிக்க உறவுகள் தொடர்வதற்கான பரிந்துரைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவற்றை தொகுத்து நோக்குகின்ற போது இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பாக பல்வேறு காலப்பகுதிகளிலும் பல நூல்கள், ஆய்வுகள் என்பன வெளியிடப்பட்டுள்ளன என்பது

தெளிவாகின்றது. எனினும் இலங்கையின் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனான வெளியுறவுகள் தொடர்பான ஆய்வுகள் அரிதாக காணப்படுகின்ற அதேவேளை யுத்தத்திற்கு பின்னரான இலங்கையின் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனான வெளியுறவுகள் தொடர்பிலான ஆய்வுகள் அரிதிலும் அரிது என்றே கூற வேண்டும். இதனால் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக யுத்தத்திற்கு பின்னரான 2009-2015 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கும் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குமிடையிலான வெளிநாட்டு உறவுகள் என்ற தலைப்பின் கீழ் இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 6. பகுப்பாய்வும் முடிவுகளும்

இவ்வாய்விற்கு தேவையான தரவுகளும் தகவல்களும் முதலாம் மற்றும் இரண்டாம் நிலை தரவு மூலாதாரங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு அதனூடாக பின்வரும் முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

**2009-2015 வரையான காலப்பகுதியில் இலங்கையின் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனான வெளியுறவினை நிர்ணயித்த காரணிகள்**

இவ்வாய்வுக்காக சேகரிக்கப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்து பெற்றுக்கொண்ட முடிவுகளின் பிரகாரம் 2009-2015 வரையான காலப்பகுதிகளில் இலங்கையானது தனது வெளிநாட்டு உறவுகளை பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ள பிரதான டொனர்களாக(Donor) விளங்கும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் கடைப்பிடிப்பதில் பல்வேறு காரணிகள் ஏதுவாக அமைந்திருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

01. மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் பின்புலம் (நேர்காணல்: எஸ்.எம்.எம்.அபூபக்கர்)
02. சீனாவுடன் பேணி வந்த நெருக்கமான வெளியுறவுக்கொள்கை
03. இலங்கைக்கெதிரான UNHRC இன் தீர்மானங்கள்
04. புலம்பெயர் தமிழர்களின் அழுத்தம் (நேர்காணல்: எம்.எம்.பாஸில்)
05. இலங்கை அரசாங்கத்தின் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு எதிரான செயற்பாடுகள்

**இலங்கையின் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனான வெளிநாட்டு உறவுகள்**

2009 ஆம் ஆண்டு இலங்கையின் உள்நாட்டு மோதலானது முடிவுக்கு கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள்(பிரித்தானியா, பிரான்ஸ், ஐரோப்பிய யூனியன்) இலங்கை அரசாங்கத்திற்கு வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் இலங்கையின் யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்தி செயன்முறைகளை முன்னெடுப்பதற்கும் ஆதரவு வழங்க முன்வந்தன. இலங்கையின் நல்லிணக்கத்தினை முன்னேற்றுவதும் பொறுப்புக்கூறலும் தொடர்பான தீர்மானம் ஒன்றை கொண்டு வந்து நிறைவேற்றி கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பயனுடைய சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துமாறும் பொருத்தமான கட்டமைப்புக்களை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் எல்லா இலங்கையருக்குமான நல்லிணக்கம், பொறுப்புக்கூறுதல், சமத்துவம், நீதி போன்றவற்றை உறுதிப்படுத்தக்கூடிய அர்ப்பணிப்புள்ள நம்பகத்தன்மை வாய்ந்த சுதந்திரமான செயற்பாடுகளை ஆரம்பிக்குமாறும் இலங்கை அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டது. இதற்கான ஆலோசனைகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் கூட இந்நாடுகள் வழங்கியிருந்தன.

பொருளாதார ரீதியாக அமெரிக்காவானது இலங்கையுடன் ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகத்தில் தொடர்ந்தும் தனது உறவினை பேணி வந்துள்ளது. இலங்கையின் மொத்த தேசிய ஏற்றுமதியில் 20% மான பொருட்கள் அமெரிக்காவுக்குரியதாக காணப்படுவதுடன் அமெரிக்காவானது ஆயிரக்கணக்கான தொழில்களை இலங்கையின் ஆடைத்துறையில் ஏற்படுத்தியிருக்கின்றது. 2011 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் அமெரிக்காவுக்கான ஏற்றுமதியானது 10% ஆல்

அதிகரித்திருக்கின்றது. 2010 ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கான ஏற்றுமதி மதிப்பீடானது 178.7 மில்லியன் அமெரிக்க டொலராகவும் 2011 ஆம் ஆண்டு 303.5 மில்லியன் அமெரிக்க டொலராகவும் 2013 ஆம் ஆண்டு 311.9 மில்லியன் அமெரிக்க டொலராகவும் 2014 ஆம் ஆண்டு 350.6 மில்லியன் அமெரிக்க டொலராகவும் அதிகரித்திருந்தமை ஆய்வினூடாக கண்டறியப்பட்டுள்ளது (www.census.gov/foreign-trade/balance/c5420.html).

இதேபோன்று 2009-2015 வரையான காலப்பகுதியில் பிரித்தானிய இலங்கை உறவானது சகல கட்சிகளின் ஈடுபாட்டுடன் உள்ளக பிணக்குக்கு தீர்வு காணல் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இலங்கையில் போரும் சமாதானமும் என்ற பிரித்தானிய பொதுச்சபையின் அறிக்கையானது போருக்கு பின்னரான இலங்கைச்சூழல் மற்றும் போருக்கு பின்னரான சர்வதேச இணைப்பாக்கம் பற்றிய ஜனாதிபதி ராஜபக்ஷவின் கொள்கை தொடர்பாக விளங்கிக் கொள்வதற்கு முக்கியத்துவமுடையதாக உள்ளது. அந்தவகையில் பிரித்தானிய தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரத்துறைகள் மீள் குடியேற்றம், இனக்குழுக்கள் சார்பான இலங்கையின் மனித உரிமைக் கோட்பாடு என்பவற்றில் பூரண கவனத்தைச் செலுத்தின.

2011 அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற CHOGM இன் போது இரு நாட்டுத் தலைவர்களும் பரஸ்பர அரசியல் விடயங்கள் பற்றி கலந்துரையாடியதன் பிரகாரம் பிரித்தானியா இலங்கைக்கு மீள்குடியேற்றம் மற்றும் புணர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதி உதவி வழங்க முன்வந்தது. 2009-2011 வரையான காலப்பகுதியில் மனிதாபிமான செயற்பாடுகளுக்காக 13.5 மில்லியன் அமெரிக்க டொலரை பிரித்தானியா வழங்கியிருந்தமையும் Colombo Port மற்றும் South Asia Gateway Terminal உட்பட பல முதலீட்டு திட்டங்களை முன்னெடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (நேர்காணல்: எம்.வி.எஸ்.சபி)

இதேவேளை இரு நாடுகளுக்குமிடையலான ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகமானது யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் 36% மான வளர்ச்சியை பெற்றிருந்தமையும் ஆய்வினூடாக கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் ஐரோப்பிய நாடுகளுள் ஒன்றான பிரான்ஸ்க்கும் இலங்கைக்குமிடையிலான பொருளாதார வர்த்தக உறவானது 2008ற்கு பின்னரான காலப்பகுதியில் 60% ஆல் அதிகரித்துச் சென்றுள்ளது. 2010 ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தினால் GSP+ சலுகை இடைநிறுத்தப்பட்ட போதிலும் அதன் அங்கத்துவ நாடான பிரான்ஸ்கு அதிகளவிலான பொருட்கள் (textile&garment products) இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக நேர்காணலின் போது தெரிய வந்தது. இவற்றில் உணவுப் பொருட்கள் 15% ஆகவும் இறப்பர் உற்பத்திகள் 14% ஆகவும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும் (www.thesundayleader.lk/2013/07/14/sri-lanka-france-economic-relations). இரு நாடுகளுக்குமிடையிலான ஏற்றுமதி வர்த்தகத்தின் மூலம் இலங்கை 2009 ஆம் ஆண்டு 143.55 மில்லியன் அமெரிக்க டொலரையும் 2010 ஆம் ஆண்டு 158.97 மில்லியன் அமெரிக்க டொலரையும் 2011 ஆம் ஆண்டு 167.91 மில்லியன் அமெரிக்க டொலரையும் 2012 ஆம் ஆண்டு 175.73 மில்லியன் அமெரிக்க டொலரையும் 2013 ஆம் ஆண்டு 194.36 மில்லியன் அமெரிக்க டொலரையும் 2014 ஆம் ஆண்டு 263.37 மில்லியன் அமெரிக்க டொலரையும் பெற்றுக் கொண்டுள்ளது (www.srilankaembassy.fr/en/page/109-france-sri-lanka-trade-relation ).

இதேபோன்று ஐரோப்பிய பிராந்திய அமைப்பான ஐரோப்பிய யூனியனும் ஆரம்பத்தில் இலங்கையுடன் சுமூகமான உறவினை கடைப்பிடித்து வந்துள்ளது. யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பொறிமுறையை உருவாக்குவதற்கான ஆலோசனைகளையும் நிதி சார் உதவிகளையும் ஐரோப்பிய யூனியன் வழங்கியிருந்தது.

இவ்வாறு ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் (பிரித்தானியா, பிரான்ஸ், ஐரோப்பிய யூனியன்) இலங்கையுடன் இராஜதந்திர மற்றும் பொருளாதார ரீதியிலான உறவுகளை கடைப்பிடித்து வந்த போதிலும் இறுதி யுத்தத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக்குற்றங்கள் தொடர்பிலான பொறுப்புக்கூறல் செயன்முறைக்கு உரிய முறையில் பதிலளிக்க தவறியமையினாலும் சீனா, பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளுடன் தனது வெளியுறவை கையாள பெரிதும் ஆர்வம் காட்டியமையினாலும் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் சுமூகமான உறவினை தொடர்ந்தும் பேண முடியாமற் போனது.

**2009-2015 வரையான காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனான வெளியுறவின் போது இலங்கை எதிர்நோக்கிய சவால்கள்**

இலங்கையானது யுத்தத்திற்கு முன்னர் பல நாடுகளின் உதவிகளை பெற்று யுத்தத்தை வெற்றி கொண்ட போதிலும் யுத்த வெற்றிக்கு பின்னர் தாம் வகுத்துக்கொண்ட வெளியுறவுக் கொள்கையில் சீரின்மை காணப்பட்டமையினால் இலங்கை சர்வதேசத்தின் மத்தியில் தோல்வி கண்ட நாடாக காணப்படுகின்றது. குறிப்பாக சீனா சார்புக் கொள்கையை ஆதரித்து ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு எதிரான கொள்கையை கடைப்பிடித்தமையினால் அந்நாடுகள் இலங்கைக்கு எதிராக பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ள வழிவகுத்திருந்தது. இதனால் இலங்கை அரசாங்கமானது தேசிய, சர்வதேச மட்டத்தில் பல்வேறு சவால்களை எதிர்நோக்க வந்தது.

**அரசியல் ரீதியான சவால்கள்**

1. இலங்கைக்கு எதிரான கண்டனத்தீர்மானம் கொண்டுவரப்பட்டமை.

உள்நாட்டு மோதலானது 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்டதை தொடர்ந்து இலங்கை கொள்கை வகுப்பாளர்கள் தமது கொள்கையை சீனா சார்பானதாக வகுத்துக் கொண்டு ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் ஒரு மேலெழுந்த வாரியான இராஜதந்திரப் போக்கை கடைப்பிடிக்க முற்பட்டனர். இது யுத்தமற்ற இலங்கையை எவ்வாறாயினும் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்து இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் தமது ஆதிக்கத்தை செலுத்த முற்பட்ட ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு சவாலாக அமைந்தது. இதனால் யுத்தக்குற்ற, மனித உரிமை விசாரணை என்ற வாசலினூடாக இலங்கைக்கு பிரவேசிக்க இந்நாடுகள் தீர்மானித்தன. இதன் விளைவாகவே ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளினால் இலங்கைக்கு எதிரான கண்டனத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. குறிப்பாக இறுதிக்கட்ட யுத்த நிலையின் போது யுத்தக்குற்றங்கள் நிகழ்ந்துள்ளதாகவும் சர்வதேச மனிதாபிமானச்சட்டம் மற்றும் மனித உரிமைச் சட்டம் என்பன மீறப்பட்டுள்ளதாகவும் கூறி இலங்கைக்கு எதிரான தொடர் தீர்மானங்கள் 2009, 2012, 2014 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளினால் கொண்டு வரப்பட்டன (நேர்காணல்: எஸ்.எம். ஆலிப்).

அந்தவகையில் 2009 ஆம் ஆண்டு செக்கோஸ்லவாக்கியாவை பயன்படுத்தி இலங்கைக்கு எதிராக மனித உரிமை பேரவையில் அமெரிக்கா முதலாவது கண்டனத்தீர்மானத்தை கொண்டு வந்த போதிலும் அது தோல்வியடைந்திருந்தது. இதனையடுத்து 2012 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 19 வது கூட்டத்தொடரில் இலங்கையின் நல்லிணக்கத்தை முன்னேற்றுவதும் பொறுப்புக்கூறுதலும் தொடர்பான தீர்மானத்தை கொண்டு வந்ததுடன் இத்தீர்மானத்திற்கு ஆதரவாக 24 நாடுகளும் எதிராக 15 நாடுகளும் வாக்களித்திருந்தன. இதில் கூறப்பட்ட பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் செயற்படுத்தாமையினால் மற்றுமொரு கண்டனத்தீர்மானத்தை 2013 ஆம் ஆண்டு மனித உரிமை பேரவையின் 22 வது கூட்டத்தொடரில் கொண்டு வந்து நிறைவேற்றியிருந்தது. இத்தீர்மானத்தில் திருத்தங்களை மேற்கொள்ள இந்தியா முனைந்தபோதிலும் அது தோல்வியில் முடிவடைந்தது. இதேவேளை 2014 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன்னர் யுத்தத்திற்கு பின்னரான நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதில் திருப்திகரமான

முன்னேற்றங்களை இலங்கை அரசாங்கம் ஆதாரபூர்வமாக நிரூபிக்க தவறினால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தனது நேரடியான விசாரணையினை இலங்கையில் ஆரம்பிக்கும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை அவர்கள் இலங்கைக்கான விஜயத்தின் போது தெரிவித்திருந்தார். எனினும் அப்போதைய இலங்கை அரசாங்கமானது வீட்டோ அதிகாரம் கொண்ட சீனா மற்றும் ரஷ்யாவுடனான இராஜதந்திர ஆதரவின் காரணமாக USA தலைமையிலான மேற்குலகின் தொடர் தீர்மானங்களையோ எதிர்பார்ப்புக்களையோ பொருட்படுத்தாது செயற்பட்டது.

இதனால் அடுத்து வந்த ஜெனிவா கூட்டத்தொடரிலும் இலங்கைக்கு எதிரான கடுமையான தீர்மானங்களை கொண்டு வரப்பட்டு இலங்கையில் இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகத்தினால் சர்வதேச விசாரணை நடாத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தது.

2. இராஜதந்திர ரீதியான தோல்வி

வெளிவிவகாரத்தை சிறந்த முறையில் கையாள்வதற்கான வழிமுறையாக இராஜதந்திரம் காணப்படுகின்றது. 2009-2015 வரையான காலப்பகுதியில் இலங்கை கடைப்பிடிதத்த வெளியுறவினால் சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இலங்கையுடன் இராஜதந்திர உறவுகளை பேணி வந்த அரசுகள் பலவும் இலங்கையுடனான இராஜதந்திர உறவுகளை முறித்துக் கொள்வதற்கும் இலங்கைக்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் வழிவகுத்திருந்தன. இந்தவகையில் 1948 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து இலங்கையுடன் நெருக்கமான உறவினை பேணி வந்த அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை கொண்டு வந்தமையும் இலங்கையின் அயல் நாடான இந்தியா இலங்கைக்கு எதிராக 2012 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தமையும் பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாட்டில் இந்திய பிரதமர் கலந்து கொள்ளக்கூடாது என தமிழக அரசியல் கட்சிகள் எதிர்த்து வந்தமையும் இதனால் இந்திய பிரதமர் கலந்து கொள்ளாமையும் இலங்கையில் பொதுநலவாய மாநாடு இடம்பெறுவதை மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய நெறியாளர் பிரட் அடம்ஸ் (Brad Adams) ''பாரியளவில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டை நடாத்துவதற்கு பொதுநலவாய அமைப்பு அனுமதித்தமை வரவேற்கத்தக்க விடயமல்ல. ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பொதுநலவாயத்தின் உத்தியோகபூர்வ விழுமியங்களை மதிக்காது செயற்படுகின்ற இலங்கையிடம் தலைமைத்துவப் பொறுப்பை ஒப்படைப்பது பொதுநலவாய அமைப்பில் காணப்படும் இரட்டை அணுகுமுறை எனக்கருதலாம்'' என கூறியிருந்தமையும் 2013 ஆம் ஆண்டு CHOGM ற்கு பிரித்தானிய மகாராணி வருகை தராதமையும் இலங்கையின் இராஜதந்திர ரீதியான தோல்வியை எடுத்துக்காட்டுகின்றன (நேர்காணல்:கமனி பெரேரா).

3. மேற்கு நாடுகளில் இலங்கைக்கெதிராக பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டமை

பிரித்தானியாவில் இலங்கை அரசுக்கு எதிராக பல வாதங்கள் முன்மொழியப்பட்டதோடு இலங்கை அரசுக்கு பல கண்டனங்களையும் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன. மேலும் பிரித்தானியாவின் Oxford பல்கலைக்கழகத்தில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பேச விடாமல் தடுத்தமை, 2011.05.26 இடம்பெறவிருந்த இலங்கை இங்கிலாந்து கிரிக்கட் சுற்றுக்கு இலங்கை அணி இங்கிலாந்திக்கு வருவதை அங்குள்ள தமிழ் பிரஜைகள் எதிர்த்தமை மற்றும் புலம் பெயர் தமிழர்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டமை என்பன போன்ற செயற்பாடுகள் இலங்கைக்கும் பிரித்தானியாவுக்குமிடையிலான தொடர்பினை கேள்விக்குட்படுத்துவதாக அமைந்திருந்தன (நேர்காணல்: டி.எப்.சஜிதா).

4. தேசியவாத சிந்தனையின் எழுச்சி

தேசிய ரீதியாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு எதிரான தேசியவாத சிந்தனைகள் எழுச்சியடைவதற்கும் வழிவகுத்திருந்தது. இது இன, மத, மொழி ரீதியாக பிளவுபட்ட இலங்கை சமூகத்தினரை ஒன்றிணைக்கும் செயற்பாடாக அமைந்திருந்தது. ஜெனீவா மனித உரிமை பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கையில் பல இடங்களிலும் பல்வேறு அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதுடன் சர்வதேச விசாரணைக்கு எதிராக பொதுமக்களிடம் கையெழுத்து மூலமான ஆதரவுகளும் பெறப்பட்டன. இது ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு எதிரான வெளியுறவினால் இலங்கை அடைந்து கொண்ட சாதகமான விளைவாக அடையாளப்படுத்தப்படுகின்றது (நேர்காணல்: எம்.வை.எம்.வை.இம்றான்).

5. சீனா, ரஷ்யா போன்ற நாடுகளுடன் நெருக்கமான வெளியுறவினை கடைப்பிடிக்க வேண்டி ஏற்பட்டதுடன் அந்நாடுகளிடமிருந்து பல்வேறு உதவிகளையும் பெற முடிந்தமை

ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கு எதிராக UNHRC இல் கொண்டு வந்த யுத்தக்குற்றங்கள் தொடர்பிலான கண்டனப்பிரேரணைகளிலிருந்து தன்னைப்பாதுகாத்துக் கொள்வதற்காக வீட்டோ அதிகாரம் கொண்ட சீனா, ரஷ்யா போன்ற நாடுகளுடன் 'எதிரிக்கு எதிரி நண்பன்' என்ற அடிப்படையில் நெருங்கிய உறவினை பேண வேண்டிய நிலை உருவாகியது. இவ்வுறவின் விளைவாக அபிவிருத்தி திட்டங்கள் பலவற்றுக்கு சீனாவிடமிருந்து அதிக நிதி உதவிகளை பெற முடிந்தது. குறிப்பாக ஹம்மாந்தோட்டை துறைமுக கட்டுமானத்திற்காக 1.5 பில்லியன் அமெரிக்க டொலரையும் மத்தலை விமான நிலையத்திற்காக 300 மில்லியன் அமெரிக்க டொலரையும் பெற முடிந்ததாக கல்வியியலாளர்களுள் ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

**பொருளாதார ரீதியிலான விளைவுகள்**

1. GSP+ வரிச்சலுகையை இழக்க வேண்டி ஏற்பட்டமை.

ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு எதிரான வெளிநாட்டு உறவினை கடைப்பிடித்தமையினால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நீடிக்கத்தக்க வளர்ச்சி மற்றும் நல்லாட்சியை ஊக்குவிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்படும் GSP+ வரிச்சலுகையை இழக்க வேண்டி ஏற்பட்டது (நேர்காணல்: எஸ்.எம். ஆலிப்). 2006 ஆம் ஆண்டு GSP+ வரிச்சலுகை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து சுமார் 720 பொருட்கள் வரியில்லாமல் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் தொடர்ச்சியாக வருடாந்தம் ஏற்றுமதி மூலமான வருமானம் அதிகரித்திருக்கின்றது. எதிர்பார்த்தது போலவே முதல் 2 வருடங்களில் இரட்டை இலக்க அதிகரிப்பு காணப்பட்டது. இதன் பிறகு வருடாந்த வளர்ச்சி வீதத்தில் ஏற்ற இறக்கங்கள் காணப்பட்டன. 2006 ஆம் ஆண்டில் 3.6% ஆகவும் 2008 இல் 6.2% ஆகவும் வருடாந்த வளர்ச்சி வீதம் காணப்பட்டது (மீள்பார்வை, 2017).

இவ்வாறு 2006 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை GSP+ வரிச்சலுகையின் கீழ் இலங்கை ஐரோப்பிய நாடுகளுக்கு ஆடைகள், மீன் போன்றவற்றை சலுகை அடிப்படையில் ஏற்றுமதி செய்து வந்ததுடன் இதன்மூலம் இலங்கையின் பொருளாதாரம் உயர்வடைந்ததுடன் அதிக அன்னியச்செலாவணியையும் பெற்று தந்தது. அத்துடன் இச்சலுகையினூடாக 4 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் நேரடி வேலைவாய்ப்பினை பெற்றுக் கொண்டதுடன் இலங்கையின் மூல வளங்களும் பயன்படுத்தப்பட்டன. மேலும் GSP+ வரிச்சலுகையின் மூலம் சுமார் 1.24 மில்லியன் யூரோக்கள் பெறுமதியான பொருட்கள் இலங்கையிடமிருந்து ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் இறக்குமதி செய்யப்பட்டன. இதன் மீது இறக்குமதி தீர்வை விதித்திருந்தால் அதன்மூலம் 78 மில்லியன்

யூரோக்கள் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு கிடைத்திருக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இவ்வாறு இச்சலுகையினூடாக இலங்கை அதிக நன்மைகளை அனுபவித்து வந்துள்ளது.

எனினும் இந்தச்சலுகையானது ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் முரணான வெளியுறவை கடைப்பிடித்ததன் விளைவாக கொண்டுவரப்பட்ட இறுதிக்கட்ட யுத்தத்தில் மீறப்பட்டதாக குறிப்பிடப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் அது தொடர்பிலான விசாரணைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கமானது உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டின் பேரில் ஐரோப்பிய ஒன்றியத்தினால் 2010 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது.

இதன்மூலம் வருடாந்த வளர்ச்சி வீதமானது 2011 இல் 10.1% ஆகவும் 2013 இல் 5.4% ஆகவும் வீழ்ச்சியடைந்ததுடன் இலங்கையின் புடவைக்கைத்தொழில் துறையானது பெரிதும் பாதிப்படைந்ததுடன் இக்காலப்பகுதியில் பெரும்பாலானவர்கள் தமது தொழில் வாய்ப்புக்களையும் இழக்க வேண்டியும் ஏற்பட்டது. மேலும் GSP+ சலுகையை இழந்ததன் காரணமாக வருடாந்தம் 800 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை இழக்க நேர்ந்ததுடன் பிரித்தானியாவுக்கான மீன் ஏற்றுமதியும் பெருமளவில் பாதிப்படைந்து அதன்மூலமான ஏற்றுமதி வருமானமும் வீழ்ச்சியடைந்ததாக நேர்காணலின் போது தெரிவிக்கப்பட்டது.

2. ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார உதவிகளை இழக்க நேர்ந்தமை.

யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்திற்கு சர்வதேச நாணய நிதியம் 1.9 மில்லியன் டொலர்களை வழங்க முன்வந்த போதிலும் USA எதிர்ப்பின் காரணமாக அதனை இழக்க வேண்டி ஏற்பட்டது. மேலும் இலங்கைக்கு வருடாந்தம் வழங்கும் உதவியில் 29 சதவீதத்தை அதாவது 11 மில்லியன் டொலரை அமெரிக்கா குறைத்ததுடன் இலங்கையின் ஏற்றுமதி பங்காளர்களில் 12 சதவீதத்தை கொண்டுள்ள பிரித்தானியாவும் தனது ஏற்றுமதி வீதத்தினை குறைத்துக்கொள்வதற்கும் வழிவகுத்திருந்தது.

மேலும் நெதர்லாந்து அரசாங்கமானது இலங்கையின் பாதுகாப்பு நிலவரத்தை கருத்திற் கொண்டு 1970 ஆம் ஆண்டு தொடக்கம் வருடாந்தம் வழங்கி வந்த 30-40 மில்லியன் யூரோக்கள் அபிவிருத்தி நிதியுதவிகளை வழங்குவதில்லை என தீர்மானித்தது. இதனடிப்படையில் நெதர்லாந்து அபிவிருத்தி துறை அமைச்சர் பேர்ட் கொலண்டல்ஸ் இலங்கைக்கான உதவி முறையினை முடிவுக்கு கொண்டு வருவதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும் (தினக்குரல், 2009). இது வெளிப்படையாகவே இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் பாதிப்பினை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது.

3. சுற்றுலாத்துறையின் வீழ்ச்சி

மிகக்குறைந்தளவு முதலீட்டுடன் அதிக அன்னியச்செலாவணியை பெற்றுத்தருகின்ற துறையே சுற்றுலாத்துறை ஆகும். சுற்றுலாத்துறை மூலம் இலங்கையின் பொருளாதாரம் அதிகரித்ததுடன் அன்னியச்செலாவணியும் இரட்டிப்பாகியுள்ளது. 1950 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகின்ற சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக காணப்பட்டதுடன் அதன் மூலமான வருமானமும் அதிகரித்திருந்தன. ஆனால் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதிகளில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனான உறவில் ஏற்பட்ட தளம்பல் நிலை காரணமாக அந்நாடுகள் தமது மக்களிடம் 'நீங்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்வதாயின் இலங்கைக்கு செல்வதை தவிர்ந்து கொள்ளுங்கள் எனவும் அவ்வாறு செல்வதாயின் இலங்கையின் வட கிழக்குப் பகுதிகளுக்கு செல்லாதீர்கள்' எனவும் குறிப்பிட்டிருந்தமையானது ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கையை குறைவடையச் செய்ததுடன் அதன்மூலம் இலங்கைக்கு கிடைக்கும் வருமானத்தையும் வீழ்ச்சியடையச் செய்திருந்தது. (நேர்காணல்: எஸ்.எம்.எம்.அபூபக்கர்)

அந்தவகையில் 2014 ஆம் ஆண்டு சுற்றுலாத்துறை மூலமான வருமானமானது 2.43 பில்லியன் அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்திருந்ததாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன (மத்திய வங்கி ஆண்டறிக்கை).

4. ஏற்றுமதி மூலமான வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் நாட்டின் கடன் சுமையும் அதிகரித்துள்ளது.

இலங்கைக்கான பெரிய ஏற்றுமதி சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் காணப்படுகின்றன. இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் சுமார் 27% மானவை அமெரிக்காவுக்கும் சுமார் 40% மானவை ஐரோப்பிய யூனியனுக்கும் மற்றும் 10% மானவை இங்கிலாந்துக்கும் செல்வதுடன் அவற்றில் அதிகமானவை ஆடைகளாகவும் ஐவுளி துணிகளாகவும் உள்ளன. எனினும் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதிகளில் இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குமிடையிலான உறவில் விரிசல் நிலை காணப்பட்டதனால் ஏற்றுமதி மூலமான வருமானமானது வீழ்ச்சியடைந்திருப்பதுடன் இலங்கையானது அதிக கடன் சுமைகளை நோக்கி நகர்வதற்கும் வழி வகுத்துள்ளது. மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் போது உடனடியான அதிகமான கடன் கொடுப்பனவு சீனாவுக்கு $8 பில்லியன் தொகையாக இருந்த அதேவேளை சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்ற மேற்கத்தேய நிதி நிறுவனங்களுக்கும் $60 பில்லியன் தொகையாக கடன் பட்டிருக்கின்றது. (நேர்காணல்: எம். சர்ஜுன்)

**முடிவுரை**

சுமார் 3 தசாப்த காலமாக இடம்பெற்று வந்த உள்நாட்டு மோதலானது 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்டதை தொடர்ந்து இலங்கை கொள்கை வகுப்பாளர்கள் தமது கொள்கையை சீனா சார்பானதாக வகுத்துக் கொண்டு ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் ஒரு மேலெழுந்த வாரியான இராஜதந்திரப் போக்கை கடைப்பிடிக்க முற்பட்டிருந்தனர். இலங்கை அரசாங்கமானது ஆரம்பத்தில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் சுமுகமான உறவினை கடைப்பிடித்து வந்தாலும் இறுதி யுத்த காலத்தில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் நடந்து கொண்ட விதத்தினை அடிப்படையாகக் கொண்டும் 2006-2009 வரையான காலப்பகுதியில் அந்நாடுகள் இலங்கைக்கு வழங்கிய உதவிகளை நிறுத்திக்கொண்டமையினாலும் LTTE வளர்ச்சி பெறுவதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் அவை ஆரம்ப காலத்திலிருந்து இராணுவ மற்றும் பொருளாதார ரீதியிலான உதவிகளை வழங்கியமையினாலும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனான வெளியுறவினை வடிவமைப்பதிலிருந்து இலங்கை பின்வாங்கிக் கொண்டது. மாறாக மேற்கு சாரா நாடுகளுடன் தனது வெளிவிவகாரத்தை கையாள்வதில் அதிக ஈடுபாடு காட்டி வந்துள்ளதுடன் இதனூடாக இலங்கையின் உள்ளக முரண்பாடும் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் யுத்த காலத்தில் வகுத்திருந்த வெளிநாட்டுக் கொள்கையானது இலங்கையில் சுமார் 30 வருட காலமாக புரையோடிப்போயிருந்த சிவில் முரண்பாட்டினை முடிவுக்கு கொண்டு வருவதற்கு ஏதுவாக அமைந்திருந்ததுடன் யுத்தத்திற்கு பின்னரான 2009-2015 வரையான காலப்பகுதியில் இலங்கை வெளியுறவுக் கொள்கையினை கையாள்வதில் தோல்வியடைந்துள்ளது என்றே கூற வேண்டும். ஏனெனில் யுத்த வெற்றியை தொடர்ந்து வந்த காலப்பகுதியில் இலங்கை அரசாங்கமானது யுத்த கால பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதையும் அரசியல் ஸ்திரப்பாட்டை ஏற்படுத்துவதையும் இலக்காகக் கொண்டு யுத்த காலத்தில் தமக்கு ஆதரவு வழங்கிய மேற்கு சாரா நாடுகளுடன் மாத்திரம் தொடர்ந்தும் உறவினை பேண விரும்பியிருந்தமையினால் ஒரு பக்கம் சாய்ந்து செல்லும் போக்கானது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிடமிருந்து எதிர்ப்பலைகள் கிளம்புவதற்கும் வழிவகுத்திருந்தது. இதனடிப்படையில் இலங்கைக்கு எதிராக யுத்தக்குற்றங்கள் தொடர்பிலான தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டதுடன் இலங்கை தேசிய மற்றும் சர்வதேச ரீதியாகவும் பல்வேறு சவால்களுக்கும் முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது.

## References


1. Azzam, A . (2016). Sri Lanka President wants 'internal' war crimes court British Broadcasting Corporation (BBC). Retrieved from http://www.bbc.com/news/world-asia-35376719.
2. Lasanda Kurukusuriya. US takes a closer look at Sri Lanka. Retrieved from: www.sundaytimes.lk/091213/news/nws_18.html.
3. Lunn, JC., & Townsend, I. (2009). War and Peace in Sri Lanka. Common library Research Paper, RP09/51.
4. Pershan Gunaratne & Berkshire Miller, J. (2015). Sri Lanka:Balancing Ties between China and the West. Retrieved from: www.thediplomat.com/2015/05/sri-lanka-balancing-ties-between-china-and-the-west/
5. 'Sri Lanka-France Economic Relations' Retrieved from: www.thesundayleader.lk/2013/07/14/sri-lanka-france-economic-relations.
6. 'Sri Lanka-France Economic Relations' Retrieved from: http://lk.ambafrance.org/sri-lanka-france-econoic,1136.
7. Taylor Dibbert. (2016). Obama's disappointing Sri Lanka Policy. Retrieved from: www.thewire-in/51728/obamas-disappointing-sri-lanka-policy/.
8. தனபாலசிங்கம் கிருஷ்ணமோகன். (2013) சர்வதேசத்துடன் இணைந்து இலங்கை பணியாற்றுமா? Retrieved from: http://tkmatura.wordpress.com/2013/05/16.
9. A 180 Degree turn in foreign policy. (2015). Retrieved from: www.thesundayleader.lk/2015/10/11/a-180-degree-turn-in-foreign-policy/.
10. Adjusting to the post war situation: New turn in Sri Lankan Foreign Policy. (2010). Retrieved from: www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code-title=395.
11. 'GSP+ சலுகையை மீளப்பெறுவதா அல்லது நாட்டின் இறைமையை அழித்துக் கொள்வதா?' மீள்பார்வை. 2017.02.10. ப-10
12. 'இலங்கையின் நெதர்லாந்து உதவியை நிறுத்தியது நெதர்லாந்து அரசாங்கம்' தினக்குரல். 2009.04.08. ப-1


### நேர்காணல்கள்

1. எஸ்.எம். ஆலிப், சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம், ஒலுவில். (நேர்காணல்: 2017.02.23)
2. எம்.எம். பாஸில், சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம், ஒலுவில். (நேர்காணல்: 2017.01.20)
3. டி.எப். சஜிதா, உதவி விரிவுரையாளர், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம், ஒலுவில். (நேர்காணல்: 2017.02.24)

4. எம்.வை.எம்.வை. இம்றான், உதவி விரிவுரையாளர், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம், ஒலுவில். (நேர்காணல்: 2017.02.24)

5. கமனி பெரேரா, நூலகர், தந்திரோபாய கற்கை நெறிக்கான பிராந்திய நிலையம்(RCSS), கொழும்பு. (நேர்காணல்: 2017.02.17)

6. எஸ்.எம். அபூபக்கர், ஆசிரியர், மரு/அல் மனார் மத்திய கல்லூரி. (நேர்காணல்: 2017.02.19)

7. எம்.ஐ.எம். வலீத், ஆசிய மன்ற ஆலோசகர். (நேர்காணல்:2017.02.18)

8. ஏ.ஜரீஸ், ஆசிரியர், எபிக் கல்வியகம், கல்முனை. (நேர்காணல்:2017.02.15)

9. எம்.வி.எஸ்.சபி, ஆசிரியர், வெவல்வத்த தமிழ் வித்தியாலயம், இரத்தினபுரி. (நேர்காணல்:2017.02.18)

10. எம்.சர்ஜூன், ஆசிரியர், எபிக் கல்வியகம், கல்முனை. (நேர்காணல்:2017.02.15)